# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2012

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 7

நேரம்: 150 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 5 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. முன்னாளில் தமிழர் கலைகளை எத்தனையாக வகுத்தனர்?

   அ) 60 ஆ) 63 இ) 64 ஈ) 46

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. நரம்புக் கருவிகளில் ஒன்று.

   அ) மேளம் ஆ) புல்லாங்குழல் இ) யாழ் ஈ) கைத்தாளம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. கயிலைவன்னியன் காலத்தில் வன்னியின் பேரரசாக மதிக்கப்பட்டது.

   அ) முள்ளியவளை ஆ) மோட்டை இ) பனங்காமம் பற்று ஈ) முறிப்பு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. சினத்தை நாம் காக்கத் தவறினால் அது எம்மை

   அ) காத்துவிடும் ஆ) அழித்துவிடும் இ) வளர்த்துவிடும் ஈ) ஏற்றிவிடும்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. வன்னியில் கண்டெடுக்கப்பட்ட ஈமத்தாழிகள் உறுதிப்படுத்துவது; அங்கு வாழ்ந்தவர்கள்

   அ) தமிழர் ஆ) சிங்களவர் இ) ஆங்கிலேயர் ஈ) பறங்கியர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. சேரமன்னன் சாமரம் வீசியது

   அ) ஔவையாருக்கு ஆ) இரட்டையருக்கு
   இ) மோசிகீரனாருக்கு ஈ) திருவள்ளுவருக்கு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. நாங்கள் எல்லோரும் தமிழ் படிக்கின்றோம். இதில் படிக்கின்றோம் என்பது

   அ) நிகழ்காலம் ஆ) எதிர்காலம் இ) இறந்தகாலம் ஈ) முடிந்தகாலம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சாமப்பண் பாடி இறைவனை மகிழ்வித்த மன்னன்

அ) இராவணன் ஆ) சோழமன்னன் இ) சேரமான் ஈ) அதியர்மான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நுண்கலைகள் இரண்டின் பெயர்கள்

அ) நாடகம், கதை ஆ) நடனம், இசை

இ) பாட்டு, படிப்பு ஈ) சிற்பம், எழுதுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. சினைப்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) மரம் ஆ) வேர் இ) மேசை ஈ) ஓடுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இராவணன் ஆட்சிக்காலத்தில் நாடு இருந்த நிலை

அ) வறுமை ஆ) செல்வச்செழிப்பு இ) வீழ்ச்சி ஈ) வறட்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. வினா எழுத்துகள்

அ) ஐந்து ஆ) ஆறு இ) மூன்று ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஆய்ச்சியர் என்பதன் எதிர்ப்பாற் சொல்

அ) ஆயர் ஆ) ஆய்ச்சி இ) ஆடவர் ஈ) விறலியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நயம் என்ற சொல் குறிப்பது

அ) அழகு ஆ) அறிவு இ) பணம் ஈ) புகழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. விபுலாநந்த அடிகளின் இயற்பெயர்

அ) நாவலன் ஆ) செல்வன் இ) வரதன் ஈ) மயில்வாகனன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. ஆல் என்பது எத்தனையாம் வேற்றுமை உருபு?

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) முதலாம் வேற்றுமை
இ) இரண்டாம் வேற்றுமை ஈ) நான்காம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இல்லறத்தார் செய்ய வேண்டிய இன்றியமையாக் கடமைகளில் ஒன்று

அ) விருந்தோம்பல் ஆ) கோபித்தல் இ) புறம் கூறல் ஈ) தீங்குசெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. சுட்டெழுத்துகள் என்பன

அ) ஐ ஒ ஓ ஆ) அ இ உ இ) எ அ இ ஈ) அ இ ஓ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சிலப்பதிகாரத்தை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) திருவள்ளுவர்
இ) பாவேந்தர் ஈ) சின்னத்தம்பிப் புலவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. யாழ்ப்பாண அரசின் தொன்மையான தலைநகர்

அ) வன்னி ஆ) கந்தரோடை இ) பூநகரி ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. திலீபன் சிவப்புப் பந்து வாங்கினான். இதில் வந்துள்ள அடைமொழி

அ) திலீபன் ஆ) பந்து இ) சிவப்பு ஈ) வாங்கினான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. இதன் வரவால் கடல் பொங்கும் என மூதுரை கூறுகின்றது.

அ) மதி ஆ) கதிரவன் இ) வியாழன் ஈ) புதன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. உலகின் முதன்மொழி தமிழ் என நிறுவியவர்

அ) வீரமாமுனிவர் ஆ) தனிநாயகம் அடிகளார்
இ) விவேகானந்தர் ஈ) தேவநேயப்பாவாணர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. உருக்குலைந்தாலும் தம் இயல்பிலிருந்து மாறாத் தன்மையுடைய பொருட்களில் ஒன்று

அ) மூங்கில் ஆ) புல் இ) கரும்பு ஈ) நெல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தமிழ்மொழியின் முதலாவது அகரமுதலி

அ) ஒப்பியல் அகராதி ஆ) சதுரகராதி

இ) பேரகராதி ஈ) சொல்லியல் அகராதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. சான்றோர் எனப்படுபவர்

அ) சினம் கொண்டவர் ஆ) ஒழுக்கத்தில் சிறந்தவர்

இ) ஒழுக்கத்தில் குறைந்தவர் ஈ) பணத்தில் சிறந்தவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. தந்தை, தகப்பன், தனயன், ஐயன் இதில் வேறுபட்ட சொல்

அ) தந்தை ஆ) தனயன் இ) ஐயன் ஈ) தகப்பன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. நீர்ச் செடிகள் இரண்டு

அ) மல்லிகை, ஆம்பல் ஆ) கொட்டி, ஆம்பல்

இ) செவ்வந்தி, தாமரை ஈ) முல்லை, அலரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பொறாமை உள்ளவனிடம் இது இருக்காது

அ) செல்வம் ஆ) அறிவு இ) இகழ் ஈ) உண்மை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மாணவர்கள் வினைக்கொடை மூலம் தெருவைத் தூய்மைப்படுத்தினர். இதில் வினைக்கொடை என்பது

அ) கூலிக்கு வேலை செய்தல் ஆ) விருப்பின்றி வேலை செய்தல்

இ) கூலியின்றி வேலை செய்தல் ஈ) வெறுப்புடன் வேலை செய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. பூநகரிப் பகுதி அகழ்வாய்வில் எந்தெந்த நாட்டு நாணயங்கள் காணப்பட்டன?

2. வன்னி தமிழரின் தொன்மையான மண் என்பதற்குரிய சான்றுகள் எவை?

3. எழுவகை ஒலிகளையும் குறிப்பதற்கு நம் முன்னோர் பயன்படுத்திய எழுத்துகள் எவை?

4. கல்லிலும் இசை எழுப்பும் இசைநுட்பத்திற்கு எடுத்துக்காட்டுத் தருக?

5. சிலப்பதிகாரம் 'முத்தமிழ் காப்பியம்' என அழைக்கப்படுவதன் கரணியம் என்ன?

6. விபுலாநந்த அடிகள் ஏழை மாணவருக்கு எவ்வாறு உதவி செய்தார்?

7. விருந்தோம்பல் பற்றிக்கூறும் இரண்டு நூல்கள் தருக.

(புள்ளிகள் 10)

**3) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழு விடை தருக.**

ஒரு நாட்டிற் பாய்ந்தோடும் ஆறுகள் இயற்கை வளங்களுட் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. மாந்த நாகரிகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஆறுகள் கரணியமாக விளங்குவதோடு பண்பாட்டு அடையாளங்கள் பலவற்றுக்கும் களமாக உள்ளன. இன்றைய மாந்த வாழ்விலும் ஆறுகள் பல வழிகளிலும் முதன்மை பெற்று விளங்குகின்றன. பொருளாதார முயற்சிகள் பலவற்றுக்கும் ஆறுகள் இன்றியமையாதவை ஆகும்.

ஆறுகள் பாய்வது ஒரு நாட்டிற்கு உணவு ஊட்டுவது போன்றது. ஆறுகள் பாய்வதனால் நிலம் பசுமை பெறும், பல்வகைப் பயிர்களும் செழிப்பாக வளரும். ஏரிகளும் குளங்களும் நீரால் நிரம்பி வழியும். நீர்வளம் மிகுந்து விளங்குவதால் மரஞ்செடி கொடிகள் யாவும் பூத்துக் குலுங்கும். இதனாலேதான், ஔவையாரும் "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" எனக் கூறினார். பண்பாட்டு அடையாளங்கள் பலவும் ஆற்றோரப் பகுதிகளிலேயே அமைந்துள்ளன. நதிக்கரைகளில் மக்கள் வாழ்ந்து வந்த கரணியத்தால் வழிபாட்டுத் தலங்கள் பலவும் ஏனைய பண்பாட்டு அடையாளங்கள் பலவும் ஆற்றோரப் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன. மாணிக்ககங்கைக் கரையில் அமைந்துள்ள கதிர்காமம், பாலாவிக் கரையிலுள்ள திருக்கேதீச்சுரம் முதலிய சைவ வழிபாட்டுத் தலங்கள் இவற்றின் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும். ஆறுகள் மக்களுக்கு நன்னீர் வழங்கும் நற்பணியைப் புரிந்து வருகின்றன. அத்தகைய ஆறுகள் அசுத்தமடையாது காப்பது நமது தலையாய கடமை ஆகும்.

(புள்ளிகள் 10)

1. திருக்கேதீச்சுரம் எந்த ஆற்றங்கரையில் அமைந்துள்ளது?

2. "ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" எனக் கூறியவர் யார்?

3. இயற்கை வளங்களில் சிறப்பான இடத்தைப் பெறுவன எவை?

4. ஆறுகள் மக்களுக்குப் புரியும் நற்பணி என்ன?

5. ஆறுகள் பாய்வதனால் நீரால் நிரம்பி வழிவன எவை?

(புள்ளிகள் 10)

## 4) பாடலை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக

*நோய்நொடி இல்லா வாழ்க்கை வேண்டும்*
*நல்ல நோக்கம் எமக்குத் தென்பட வேண்டும்*
*வாழும் வாழ்க்கை உயர்வுபட*
*வாழ்வியல் தத்துவம் தெரிந்திட வேண்டும்*

*ஓடியாடித் திரிவதனாலே*
*உடலில் சுறுசுறுப்பு அதிகமாகும்*
*வாடிப்போய் ஒரு மூலையிலே*
*முடங்கிக் கிடப்பதைத் தவிர்த்திடலாம்*

*இன்று செய்வதை இன்றே செய்*
*என்றும் பெருமை அது சேர்க்கும்*
*மனதில் சோர்வின்றி வாழ்ந்திட்டால்*
*மாந்தர் மதித்திட வாழ்ந்திடலாம்*

1. எதைச் செய்யச் சொல்லிக் கவிஞர் கூறுகின்றார்?

_______________________________________________

2. ஓடியாடித் திரிவதனால் எது அதிகமாகும்?

_______________________________________________

3. வாழ்க்கை உயர்வுபட எது தெரிந்திட வேண்டும்?

_______________________________________________

4. எது எமக்குத் தென்பட வேண்டும்?

_______________________________________________

5. எப்படிப்பட்ட வாழ்க்கை வேண்டும்?

_______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துகளைத் தருக.

______________________________

2. எழுவாய் அடைமொழியுடன் கூடிய சொல்லியம் ஒன்று தருக.

______________________________

______________________________

3. பின்வரும் வினைமுற்றுகளின் காலத்தையும் இடைநிலைகளையும் குறிப்பிடுக.

| | **காலம்** | **இடைநிலை** |
|---|---|---|
| படித்தான் | | |
| ஓடுகின்றான் | | |
| நிற்பான் | | |

4. லகர, ளகர வேறுபாடு தோன்றச் சொல்லியங்கள் எழுதுக.

வால் ______________________________

வாள் ______________________________

5. பெயரெச்சம் மூன்றும் வினையெச்சம் மூன்றும் தருக.

| **பெயரெச்சம்** | **வினையெச்சம்** |
|---|---|
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |

(புள்ளிகள் 15

6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

We should respect our parents. Our parents play a vital part in our life. They work hard to bring us up very well. Father goes to work in order to fulfil children's needs. Mothers too have a job in supporting the family. In addition parents also do household tasks for the sake of their children.

Wij moeten onze ouders respecteren. Ze nemen een belangrijke plaats in ons leven. Ze werken hard om ons te zorgen. Vader gaat naar werk om de behoeften van kinderen te vervullen. Moeder werkt ook om familie te helpen. En zij doen ook de huishoudelijke taken voor de kinderen.

Vi må respektere våre foreldre. De spiller en viktig rolle i våre liv. De arbeider hardt for å oppfostre oss. Pappa jobber for å dekke våre behov. Mor jobber for å være med på å støtte familien. I tillegg til å ta seg av husarbeid for barna.

Wir müssen unsere Eltern respektieren. Sie spielen in unserem Leben eine sehr wichtige Rolle. Unsere Eltern arbeiten ziemlich hart um uns großzuziehen. Um die Wünsche der Kinder zu erfüllen, geht der Vater arbeiten. Um der Familie zu helfen, geht auch die Mutter arbeiten. Darüber hinaus kümmert sie sich auch um den Haushalt.

Vi skal respekterer vores forælder. De er et vigtigt del af vores liv. De arbejder hårdt for at vokse os. Far arbejder for at opfylde børnenes behov. Også mor arbejder for at hjælpe familien. Oveni laver de også husholdningsarbejde for børnene.

Noi dobbiamo rispettare i nostri genitori. Loro occupano un posto importante nella nostra vita. Lavorano duramente per crescerci. Il papa' va a lavoro per soddisfare i nostri bisogni. Anche la mamma sostiene la famiglia lavorando. Inoltre svolgono anche i lavori di casa.

Nous devons respecter nos parents, ils font partis de notre vie. Ces derniers ont une grande importance dans notre vie. Ils travaillent jour et nuit de façon à bien nous élever. Le père part au travail pour satisfaire les besoins des enfants. Par ailleurs, la mère part au travail afin d'être présente pour les besoins de la maison et de la famille. Par la suite, les parents aident les enfants pour les devoirs à la maison.

Vi måste respektera våra föräldrar. De är viktiga i våra liv. De kämpar hårt för att uppfostra oss. Mamma jobbar också för familjens behov. Samtidigt sköter mamma även hushållet för barnens skull.

(புள்ளிகள் 05)

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து, 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

**கயிலைவன்னியன்**

**விருந்தோம்பல்**

**உம்மால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு**

(புள்ளிகள் 20)